அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப, நிச்சயமாக திண்டிவனம் தாலுகாவில் அந்த இரண்டு நிறுவனங்களும் வருவதற்குண்டான முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 32. . . (குறுக்கீடு) சற்று இருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற கூட்டத்தில், Parliament–ல் exclusively for Members–க்கு இருக்கின்ற Central Hall போல், அங்கத்தினர்கள் மட்டும் உட்கார்ந்து coffee சாப்பிடுகின்ற ஒரு வளாகத்தை உருவாக்கித் தர வேண்டும் என்று நான் கேட்டேன். ஏனென்றால் மற்ற இடங்களில் போய் உட்கார்ந்து பேசுவது சரியாக இல்லை என்று Central Hall போல் உருவாக்கித் தாருங்கள் என்று கேட்டேன். தாங்கள் அந்தக் கோரிக்கையை ஏற்று, Committee Hall–ல் அதற்கான ஏற்பாட்டை செய்திருக்கின்றீர்கள். இப்போது நான் போய் பார்த்தேன். எனவே, MLAs சார்பில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அதனை முறையாகப் பயன்படுத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

32—

புதிய நியாய விலைக் கடை

***2228—திரு. எஸ். ஆஸ்டின்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி தொகுதி, தடிக்காரன்கோணம் ஊராட்சி, வீரப்புலி கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2020 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்குகின்ற தெய்வம் மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாசியோடு, தமிழகத்தில் ஏழை எளிய சாதாரண மக்களுடைய வாழ்விற்காக நித்தம் நித்தம் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற வேளையில் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், விவசாயக் கூலிகள் மட்டுமே நிறைந்திருக்கின்ற எங்கள் திருவாரூர் மாவட்டம் உள்ளிட்ட காவேரி டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண்மை மண்டலமாக அறிவித்த தமிழகத்தினுடைய அருமைக்குரிய அண்ணன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அவர்களுக்கு உற்ற துணையாக, உறுதுணையாக இருந்து செயலாற்றிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி தொகுதி, தடிக்காரன்கோணம் ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடையைப் பிரித்து ஒரு பகுதிநேரக் கடை வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அந்த நியாய விலைக் கடை 1,113 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகின்றது. அதில் இணைக்கப்பட்டிருக்கின்ற வீரப்புலி கிராமத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டபோது, 50 குடும்ப அட்டைகள் இருந்தன. தற்போது 20 குடும்ப அட்டைகள் குறைந்து 30 குடும்ப அட்டைகள்தான் இருக்கின்றன. எனவே, 30 குடும்ப அட்டைகள் உள்ள வீரப்புலி என்ற இடத்திற்கென தனியாக ஒரு பகுதிநேரக் கடை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.*

முற்பகல் 11–10

திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்ற பொதுமக்களின் மன வேதனையை மிகுந்த*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

வருத்தத்தோடு இங்கே பதிவு செய்து கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி நேரத்தில் இங்கே குற்றச்சாட்டுகளை சொல்கிறார். ** என்று சொல்கிறார். உங்கள் ஆட்சியில்தான் ** தவிர, எங்கள் ஆட்சியில் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், கேள்வி நேரத்தில் பொதுவாக குற்றச்சாட்டு வேண்டாம், அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடு) இல்லை. அது நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. நாட்டு நடப்பைத்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சரையோ, அரசாங்கத்தையோ, மாண்புமிகு அமைச்சரையோ, யாரையும் குறிப்பிட்டு நான் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், நான் இன்று கேள்வி நேரத்தை எவ்வளவு சீக்கிரம் முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடிப்பதற்கு முயற்சி செய்கிறேன். இன்னும் 3, 4 கேள்விகள் இருக்கின்றன. நேரத்தைப் பாருங்கள். நீங்கள் கொஞ்சம் ஒத்துழையுங்கள். (குறுக்கீடு) இல்லை. கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 30 குடும்ப அட்டைகள் வீரப்புலி பகுதியிலே இருக்கின்றன, அதற்காகத் தனியாக ஒரு கடை அமைக்க வேண்டுமா என்று கேட்டிருந்தார்கள். ஒரு நபர் பாதிக்கப்பட்டாலும் அவரைப் பாதுகாக்க வேண்டிய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2020 பிப்ரவரி 17]

கடமை நம்முடைய அரசாங்கத்திற்கு இருக்கிறது. இருந்தாலும் நான் கேள்விப்பட்ட வரையில், 80 குடும்ப அட்டைகள் அங்கே இருப்பதாகச் சொன்னார்கள். அந்த வீரப்புலி பகுதியிலிருந்து அவர்கள் பொருட்களை வாங்கக்கூடிய நியாய விலைக் கடை என்பது அருமநல்லூர் பகுதியிலே இருக்கின்றது. கிட்டத்தட்ட இரண்டரை கிலோ மீட்டர் தூரம் நடந்து செல்ல வேண்டும். அதிலும் இடையிலே பழையாறு குறுக்கே வருகின்றது. பழையாற்றில் இறங்கித்தான் ஏற வேண்டியிருக்கின்றது. பழையாற்றில் தண்ணீர் போகின்றபோது 4 கிலோ மீட்டர் சுற்றிச் சென்றுதான், நியாய விலைக் கடையில் பொருட்களை வாங்க வேண்டிய நிலையில் அப்பகுதி மக்கள் இருக்கின்றார்கள். எனவே, விதிமுறைகளை சற்று தளர்த்தி அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை செய்கின்ற வகையிலே, அவர்களுடைய கஷ்டத்தைப் புரிந்துகொண்டு, இந்த அரசு அந்தப் பகுதியில் ஒரு நியாய விலைக் கடை அமைப்பதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வீரப்புலி என்ற இடத்தில் இருக்கும் நியாய விலைக் கடையில் 80 குடும்ப அட்டைகள் இருப்பதாகச் சொன்னார்கள்.*

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. ரவி) தலைமை]

ஆனால், 30 குடும்ப அட்டைகள்தான் இருக்கின்றன என்பது இந்த வாரத்தில் ஆய்வு செய்யப்பட்ட புள்ளிவிவரம். எனவே, அவர் சொன்னதுபோல், 80 குடும்ப அட்டைகள் இருக்குமாயின் மீண்டும் ஆய்வு செய்து, ஒரு நதியைக் கடக்கின்ற சூழ்நிலை இருந்தால், வீரப்புலி என்ற கிராமத்தில் ஒரு புதிய நியாய விலைக் கடை அமைப்பதற்குரிய குறிப்பாணையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் பெற்று, அதனைச் செய்து கொடுப்பதற்குரிய வாய்ப்பு இருந்தால், நிச்சயமாக உறுதியாக செய்து கொடுப்போம் என்கின்ற அந்தச் செய்தியினை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரை, சாதாரண மக்கள் எந்தச் சூழ்நிலையிலும் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக

அவர்களைப் பாதுகாக்கின்ற வகையிலேதான் பொது விநியோகத் திட்டத்தை மிகச் சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். அந்தவகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. ரவி): மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வீரப்புலி சந்திப்பு அருகிலே உள்ள ARS தடிக்காரன்கோணம் நியாய விலைக் கடைக்கு CMS area, பாரதி நகர், வீரப்புலி மாட்டுத்தாரை, நீதிப்புரம் ஆகிய பகுதிகளில் உள்ள கிட்டத்தட்ட 300 குடும்ப அட்டைதாரர்கள் ஒரு கிலோ மீட்டர் தூரம் சென்று பொருட்களை வாங்குகின்றார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் சொன்னதைப்போல, வீரப்புலி பகுதியிலே குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தால், வீரப்புலி அருகில் உள்ள CMS area, பாரதி நகர், வீரப்புலி மாட்டுத்தாரை, நீதிப்புரம் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள அந்த 300 குடும்ப அட்டைதாரர்களையும் இணைத்து ஒரு முழுநேர நியாய விலைக் கடையையோ அல்லது பகுதிநேர நியாய விலைக் கடையையோ அமைக்கலாம். அதனை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்டுக்கொள்வதோடு, ஏற்கெனவே மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரையில் நான் ஒரு துணைக் கேள்வி கேட்டிருந்தேன். சகாய நகர் ஊராட்சிக்குட்பட்ட குறுக்கன்குளம் பகுதியில் மக்கள் மூன்று கிலோ மீட்டர் நடந்து சென்று பொருட்களை வாங்க வேண்டியிருக்கின்றது. அங்கே ஒரு நியாய விலைக் கடை, பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத் தரப்படுமா என்று கேட்டிருந்தேன். எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளும் கட்சிக்கு விதிவிலக்கு அளிப்பதுபோல எதிர்க்கட்சிக்கும் அளிப்பீர்களா என்று கேட்டிருந்தேன். அவர்களும் அழகாக பதில் சொன்னார்கள். ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று பார்ப்பதில்லை, நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்று சொன்னார்கள். மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பரிசீலனையில் அது வரவில்லை என்று கருதுகிறேன். அதையும் சேர்த்து அமைத்துத் தர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

2020 பிப்ரவரி 17]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. ரவி): *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–15

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதே தடிக்காரன்கோணம் பகுதியில் இன்னொரு முழுநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமென மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். கடந்த 8 ஆண்டுகளில் மட்டும் தமிழ்நாட்டில் 795 முழுநேர நியாய விலை அங்காடிகளும், 1,686 பகுதிநேர அங்காடிகளும் என மொத்தம் 2,481 புதிய அங்காடிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின்மூலம் சாதாரண மக்களுக்கு உணவுப் பொருட்களை விநியோகம் செய்து கொண்டிருக்கிறோம் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(*மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை*)

தமிழ்நாடு முழுவதும் 35,744 நியாய விலைக் கடைகளின்மூலம் சிறப்பான முறையில் பொது விநியோகத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இந்த இரண்டு கோரிக்கைகள்மீதும், ஆய்வின் அடிப்படையில், தேவைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கி. கலைவாணன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

33—

கால்நடை மருத்துவமனை

***53300—திரு. பூண்டி கி. கலைவாணன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—